Opening of a Tourist Reception Centre near Madurai Junction.

*150 *Q.* THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that a request has been made by the Tourist Traffic Advisory Committee, Madurai, to open a Tourist Reception Centre there near the Railway Junction ; and

(*b*) if so, the action taken thereon?

மதுரை ரயில்வே சந்திப்புக்கு அருகே ஒரு சுற்றுலாப் பயணிகள் வரவேற்பு நிலையம் அமைத்தல்.

திரு. பி.ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை ரயில்வே சந்திப்புக்கு அருகே சுற்றுலாப் பயணிகள் வரவேற்பு நிலையம் ஒன்றை அமைக்க மதுரை சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்து ஆலோசனைக்குழு கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை. 1961–ம் ஆண்டு முதற்கொண்டே மதுரை சுற்றுலா அலுவலகத்தைச் சார்ந்ததொரு, சுற்றுலா தகவல் நிலையம் மதுரை இரயில் சந்திப்பில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக செயல்பட்டு வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Cannot the Government open some Tourist Information Offices both at Madurai Junction and at Air-port for the convenience of foreign tourists?

மாண்புமிகு டாக்டர் இரா .நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரை ஜங்ஷனில் இப்போது " Information Office " ஒன்று இருக்கிறது. Air-port–ல் office இருக்கிறதா என்பதுபற்றித் தகவல் இல்லை. அதுபற்றி ஆராயலாம்.

Deepening of Tanks in Kanyakumari District

*151 *Q.* THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) whether it is a fact that the Special Minor Irrigation Programme of depening tanks has not been implemented in Kanyakumari District; and

1975 மார்ச் 11]

(b) if so, the steps proposed to be taken by the Government to implement the Scheme in the District?

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளங்களை ஆழப்படுத்தல்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) குளங்களை ஆழப்படுத்தும் தனித் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்திட்டத்தை அம்மாவட்டத்தில் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத் தில் குளங்களை ஆழப்படுத்தும் திட்டங்கள் எதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, குளங்களை ஆழப்படுத்து வதற்கு ஒரு கிராஷ் புரோகிராம் மற்ற மாவட்டங்களில் செயல்படுவதாக அறிகிறேன். சென்ற ஆண்டு நான் அணுகிக் கேட்டபோது, அந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, டிரான்ஸ்பர்ட் டெர்ரிடரிக்கு. எக்ஸ்டெண்ட் ஆகவில்லை என்று சொல்லப்பட்டது. அதனுல்தான் இந்தக் கேள்வியை நாங்கள் போட்டோம். அப்படியிருக்குமானுல் பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை நம் அரசு அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கு இருக்கிற நிலைமையே வேறு. ஏற்றத் தாழ்வு நிறைந்த பூமி. அங்கு இருக்கிற குளங்கள், ஏரிகள் எனலாம். ஆற்றுப் பாசனத்திற்கு நேரடி யாகத் தண்ணீர் சேருகின்ற பகுதி ஏரிகள் ஆகும். அவைகளை ஆழப் படுத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. மேலும் அது தேவை யில்லை என்று தலைமைப் பொறியாளர்கள் எழுதியிருக்கிருர்கள். மேலும் அதை ஆழப்படுத்தி மண்ணை எடுத்து எங்கே கொட்டுவது என்பது பிரச்சினை. பக்கத்திலே உள்ள பூமிகளெல்லாம் விலையுயர்ந்த பூமி. கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. ஆகவேதான், இப்போது சாத்திய மில்லை என்று நான் சொன்னேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஏற்றத் தாழ்வு மிகுதியான பூமி. ஆற்றுப்பகுதி கால்வாயே கிணறுகளில் வந்து பாய்கிறது. ஆதலால் மழைகாலத்தில்தான் மண்மேடிட்டு விடு கிறது. ஆனுல், அந்த மண்ணை எங்கே கொண்டுபோய்ப் போடுவது என்று வருகின்ற போது, அந்தந்தக் கரைகளிலேயே கரைகொள்கிற அளவுக்கு

கரையை பலப்படுத்தினால் தண்ணீருடைய கொள்ளளவும் அதிகப்படும், மற்ற மாவட்டங்களைப்போல பெருமளவு மண்ணை வேறு எங்கும் போட முடியாவிட்டாலுங்கூட, கரைகொள்ளும் அளவுக்குச்செய்ய பரீட்சார்த்தமாகவாவது ஒரு திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே. அதிலேயும் சில சிக்கல்கள் இருக்கின்றன. கரை கொள்ளும் அளவிற்கு அதிகமாக ஆக்கலாம் என்றால், பாசனத்திற்கு இருக்கின்ற பூமி ரொம்ப மேடான இடத்திலே இருக்கிறது. இதை எவ்வளவு அதிகமாக ஆக்கினாலும், கீழே தண்ணீர் போய்ப் பாய்வதில் சங்கடம் இருக்கிறது. இருந்தாலும் அங்கு அவர்கள் சொல்கின்ற யோசனையை ஆராய்ந்து, இந்த இலாகாவைப் பரிசீலிக்கச் சொல்கிறோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, விவசாயிகள் இதை உரங்களாகப் பயன் படுத்தினால் ஏதாவது ஆட்சேபணை இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அதை எடுத்துக் கொள்வது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இது வண்டல் மண். வண்டல் மண்ணை உரம் போல உபயோகிக்கலாம். உரம் விற்கின்ற விலையிலே கம்போஸ்ட் உரம் மாதிரி நிறைய ஜனங்கள் ஆசைப்பட்டு இதனை உபயோகப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி யாராவது விவசாயிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்தால், அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அரசாங்கமும் தடுக்காது.

Desilting the Kandarathithan Tank in Ariyalur Taluk

*152 *Q.* THIRU C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the Government have received any request to desilt the Kandarathithan Tank, Ariyalur Taluk, Tiruchirappalli District; and

(*b*) if so, the action taken thereon by the Government?